இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**எந்தவொரு பதிலின் மையத்திலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திய பேராயர், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு எதிராக பயனுள்ள மற்றும் நீடித்த அனைத்துலகக் கட்டமைப்பிற்கு வழிவகுக்கும் உரையாடலை திருப்பீடம் எதிர்நோக்குவதாகக் கூறினார்.**

# போர்க்குற்றங்களைத் தடுக்க திருப்பீடம் அழைப்பு!



பேராயர் கபிரியேலே காச்சா

**பேராயர் காச்சா தனது உரையில், மனித வாழ்க்கையின் மீதான மீறல்கள் அதிகரித்து வருவதாகவும், கூட்டு பதில்களின் பற்றாக்குறை குழந்தைகள், பெண்கள் மற்றும் இன மற்றும் மதச் சிறுபான்மையினருக்கு தொடர்ந்து தீங்கு விளைவிப்பதாகவும் எச்சரித்தார்.**

போர்க்குற்றங்களை அங்கீகரிப்பதைத் தாண்டி, பயனுள்ள தடுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துமாறு அனைத்துலகச் சமூகத்தை திருப்பீடம் வலியுறுத்துவதாகக் கூறினார் பேராயர் கபிரியேலே காச்சா.

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களைத் தடுத்தல் மற்றும் தண்டிப்பது தொடர்பான ஐக்கிய நாடுகள் அவையின் மாநாட்டிற்கான தயாரிப்புக் குழுவில் உரையாற்றுகையில், இவ்வாறு தெரிவித்தார் ஐ.நா.விற்கானத் திருப்பீடப் பிரதிநிதி, பேராயர் கபிரியேலே காச்சா.

மனித வாழ்க்கையின் மீதான மீறல்கள் அதிகரித்து வருவதாகவும், கூட்டு பதில்களின் பற்றாக்குறை குழந்தைகள், பெண்கள் மற்றும் இன மற்றும் மதச் சிறுபான்மையினருக்குத் தொடர்ந்து தீங்கு விளைவிப்பதாகவும் எச்சரித்தார் பேராயர் காச்சா.

மேலும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான பாதுகாப்புகளுடன், அனைத்துலகச் சட்டத்தின் அடிப்படையில் ஆக்கபூர்வமான உரையாடலின் அவசியத்தை தனது உரையில் வலியுறுத்தினார்.

நிறைவுத்தன்மை, உரிய நடைமுறை மற்றும் அடிப்படை மனித உரிமைகளை மதித்து, நாடுகடந்த குற்றங்களை நிவர்த்தி செய்வதற்கு பன்னாட்டு ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார்.

எந்தவொரு பதிலின் மையத்திலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திய பேராயர், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு எதிராக பயனுள்ள மற்றும் நீடித்த அனைத்துலகக் கட்டமைப்பிற்கு வழிவகுக்கும் உரையாடலை திருப்பீடம் எதிர்நோக்குவதாகக் கூறினார்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# பின்லாந்து, கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான ஒரு முன்மாதிரியான நாடு!


பின்லாந்து நாட்டின் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான பிரதிநிதிகளுடன் திருத்தந்தை (ANSA)

**“பெரும்பாலும் விரக்தியால் நிறைந்திருக்கும் இவ்வுலகில், அனைத்து விசுவாசிகளும் "நம்பிக்கையின் தூதுவர்களாக இருக்க வேண்டும்”: திருத்தந்தை பதினான்காம் லியோ**

ஜனவரி 19, திங்கள்கிழமையன்று, உரோமையில் நடைபெற்ற புனித ஹென்றிக் திருவிழாவின் போது, பின்லாந்து நாட்டின் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான பிரதிநிதிகளை வரவேற்று மகிழ்ந்த வேளை, "பின்லாந்து கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான ஒரு முன்மாதிரியான நாடு" என வர்ணித்தார் திருத்தந்தை.

ஹெல்சின்கியின் பேராயர் எலியா மற்றும் பேராயர் தபியோ லூமா இருவரையும் வாழ்த்தியதுடன் பின்லாந்தின் அரசுத் தலைவர் அலெக்சாண்டர் ஸ்டப் அவர்களின் வாழ்த்துச் செய்திகளையும், டர்குவின் உயர்மறைமாவட்டத்தின் 750-வது ஆண்டு விழாவையும் குறிப்பிட்டு அவர்களுடன் உரையாடினார்.

கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக நடத்தப்படும் இறைவேண்டல் வாரம் குறித்து பேசிய திருத்தந்தை லியோ அவர்கள், திருமுழுக்கில் வேரூன்றிய கிறிஸ்தவ நம்பிக்கையை வலியுறுத்தியதுடன், பெரும்பாலும் விரக்தியால் நிறைந்திருக்கும் இவ்வுலகில், அனைத்து விசுவாசிகளும் "நம்பிக்கையின் னதுவர்களாக" இருக்க வேண்டும் என்ற அழைப்பினையும் விடுத்தார்.

நோய் தடுப்பு, பராமரிப்பு மற்றும் இடம்பெற்று வரும் கத்தோலிக்க-லூத்தரன் உரையாடல் உள்ளிட்ட சமூக மற்றும் இறைப்பணிக்கான முயற்சிகளில் ஆர்த்தடாக்ஸ், லூத்தரன் மற்றும் கத்தோலிக்கத் தலைவர்கள் இடையேயான ஒத்துழைப்பைக் குறிப்பிட்டு, "பின்லாந்து கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான ஒரு முன்மாதிரியான நாடு" என வர்ணித்துப் பாராட்டினார்.

புனிதர்கள் பேதுரு, பவுல் மற்றும் ஹென்றிக் ஆகியோரின் பரிந்துரையை வேண்டி, அடுத்த மாதம் தொடங்கவிருக்கும் அனைத்துலகக் கத்தோலிக்க-லூத்தரன் உரையாடலின் ஆறாவது கட்டத்திற்கு இந்த அனுபவங்களை எடுத்துச் செல்லுமாறு தூதுக்குழுவினரை ஊக்குவித்த திருத்தந்தை, ஒன்றிப்புக்கான ஒரு சிறிய இறைவேண்டலுடன் தனது உரையை நிறைவு செய்தார்.

செபாஸ்தியான் வனத்தையன் – வத்திக்கான்

# ஆப்கானிஸ்தானின் பெண்கள் உரிமை ஆர்வலருக்கு சையத் விருது!

**அர்மீனியப் பிரதமர் நிக்கோல் பாஷின்யான் மற்றும் அஜர்பைஜான் அதிபர் இலஹாம் அலியேவ் இருவரும் இந்த அங்கீகாரத்தை வரவேற்றுள்ளதுடன் இதன் அடையாள முக்கியத்துவத்தையும், ஷேக் சையத் பின் சுல்தான் அல் நஹ்யானின் பாரம்பரியத்துடனான இதன் இணைப்பையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

ஜான்சி ராணி அருளாந்து - வத்திக்கான்


சையத் விருது பெறும் சர்கா யப்தாலி

2026-ஆம் ஆண்டுக்கான மனித உடன்பிறந்த உறவுக்கான சையத் விருது பல ஆண்டுகளாக நீடித்த மோதல்களை முடிவுக்குக் கொண்டுவந்த அர்மீனியா அஜர்பைஜான் அமைதி ஒப்பந்தம் மற்றும் ஆப்கானிஸ்தான் பெண்களின் கல்விக்காகப் போராடும் உரிமை ஆர்வலர் மற்றும் கல்வியாளர் சர்கா யப்தாலி ஆகியோருக்கு வழங்கப்பட உள்ளது.

அனைத்துலக மனித உடன்பிறந்த உறவு தினத்தை முன்னிட்டு, வரும் பிப்ரவரி 4, புதன்கிழமையன்று அபுதாபியில் உள்ள ஐக்கிய அரபு எமிரேட்ஸின் முதல் அரசுத் தலைவர் ஷேக் சயீத் பின் சுல்தான் அல் நஹ்யான் அவர்கள் நினைவகத்தில் சிறப்பு விருது வழங்கும் விழா நடைபெறவுள்ளது. இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு ஜனவரி 19, திங்களன்று வெளியிடப்பட்டது.

இந்த சையத் விருதானது, காக்கசஸ் மாநிலத்தில் பல ஆண்டுகளாக நீடித்த மோதலை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், கடந்த 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8, வெள்ளியன்று அமெரிக்காவில் அர்மீனியா மற்றும் அஜர்பைஜான் நாடுகளுக்கு இடையே கையெழுத்தான வரலாற்றுச் சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தத்தை அங்கீகரித்துள்ளது.

"அமைதி என்பது ஒரு கணத்தில் நிகழும் செயலல்ல, அது ஒரு தொடர்ச்சியான பயணம்" என்று வலியுறுத்திய அனைத்துலகக் குழு, "இந்த ஒப்பந்தத்தை உரையாடல், நல்லிணக்கம் மற்றும் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான ஒரு நீடித்த செயல்முறை" என்று பாராட்டியது.

மேலும், அர்மீனியப் பிரதமர் நிக்கோல் பாஷின்யான் மற்றும் அஜர்பைஜான் அதிபர் இலஹாம் அலியேவ் இருவரும் இந்த அங்கீகாரத்தை வரவேற்றுள்ளதுடன் இதன் அடையாள முக்கியத்துவத்தையும், ஷேக் சையத் பின் சுல்தான் அல் நஹ்யானின் பாரம்பரியத்துடனான இதன் இணைப்பையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் பெண் கல்விக்காகத் தொடர்ந்து பாடுபட்டு வரும் சர்கா யப்தாலியின் நீண்டகால அர்ப்பணிப்பு இந்த விருதின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவரது பல்வேறு திட்டங்களின் வாயிலாக, ஓர் இலட்சத்திற்கும் அதிகமான பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குக் கல்வி, மனநல ஆதரவு மற்றும் அடிப்படைத் தேவைகள் சென்றடைந்துள்ளன.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள யப்தாலி அவர்கள், "இந்த விருதானது ஆப்கானிஸ்தானியப் பெண்களுக்கு, குறிப்பாகக் கடினமான சூழ்நிலையிலும் கல்வியைத் தொடரும் பெண்களுக்கு, நம்பிக்கை மற்றும் ஊக்கத்தின் வலிமையான செய்தியாக உள்ளது" என்று கூறியுள்ளார்.

# CAPA 2026: மேய்ப்புப்பணி புதுப்பித்தல் குறித்து அருட்பணியாளர்கள் சிந்தனை

கோலாலம்பூர்: கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் குருக்களுக்கான வருடாந்திர மேய்ப்புப்பணி மாநாடு (Clergy Annual Pastoral Assembly - CAPA), ஜனவரி 12 முதல் 15 வரை மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில் நடைபெற்றது. இதில் குருக்கள் அனைவரும் இறைவேண்டல் செய்யவும், சிந்திக்கவும், ஒரு சமூகமாக இணைந்து தேர்ந்து தெளியவும் கூடினர். மறைந்த பேராயர் தான் ஸ்ரீ டொமினிக் வெண்டர்கோன் அவர்களின் காலத்திலிருந்து இந்த மாநாடு தடையின்றி நடைபெற்று வருகிறது. பெருந்தொற்றுக் காலத்தில் கூட இது இணையம் வாயிலாக நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பேராயர் ஜூலியன் லியோ அவர்கள் மாநாட்டின் கருப்பொருளை அறிமுகப்படுத்தித் தொடக்க உரையாற்றினார். "அவர் இதயத்திற்கு ஏற்ற மேய்ப்பர்கள்: கொள்கைகள், மக்கள் மற்றும் நம்பிக்கையுள்ள எதிர்காலம்" (எரேமியா 3:15) என்பதே இவ்வாண்டின் மையக்கருத்தாகும். "CAPA என்பது வெறும் நிகழ்ச்சிகளைத் திட்டமிடும் கூட்டம் மட்டுமல்ல; மாறாக, 'நல்ல ஆயனின்' (இயேசுவின்) இதயத்தால் நாம் மீண்டும் வடிவமைக்கப்பட வேண்டிய நேரம்," என்று அவர் குருக்களுக்கு நினைவூட்டினார். இரக்கமற்ற கொள்கைகள், சரியான வழிகாட்டுதல் இல்லாத மக்கள், மற்றும் தேர்ந்து தெளிதல் இல்லாத நம்பிக்கை ஆகியவை கிறிஸ்துவில் வேரூன்றாவிட்டால், அவை தங்கள் உண்மையான நோக்கத்தை இழந்துவிடும் என்று அவர் குறிப்பிட்டார்.

இம்மாநாடு மூன்று முக்கியத் துறைகளில் கவனம் செலுத்தியது:

1. மறைக்கல்வி (Catechesis)
2. மேய்ப்புப்பணிக் கொள்கைகள் மற்றும் எல்லைகள் (Pastoral policies and boundaries)
3. இளையோர் பணி (Youth Ministry)

மாநாட்டின் ஒருங்கிணைப்பாளரான அருட்பணி சைமன் லப்ரோய், இந்தச் சந்திப்பின் மூலம் எதிர்பார்க்கப்படும் பயன்களை விவரித்தார். நிர்வாகக் கோப்புகளாக இல்லாமல், மேய்ப்புப்பணிக்கு உதவும் நடைமுறைக் கருவிகளாக அமையக்கூடிய வரைவு மேய்ப்புப்பணிக் கொள்கை, புதுப்பிக்கப்பட்ட இளையோர் செயல்திட்டம் மற்றும் புதிய மறைக்கல்வி வழிகாட்டுதல்கள் ஆகியவை இதில் அடங்கும்.

**முதல் நாள்:** அருட்பணியாளர் டேவிட் அருளானந்தன் மறைக்கல்வியை மறுவடிவமைப்பது குறித்துப் பேசினார். மறைக்கல்வி என்பது வெறும் ஏட்டுப் படிப்பாக இருக்கக்கூடாது என்றும், மாறாக அது கிறிஸ்துவை மையமாகக் கொண்டதாகவும், மறைபரப்புப் பணி ஆர்வமுள்ளதாகவும், குடும்பங்களை ஈடுபடுத்துவதாகவும் இருக்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார். மேலும், இன்றைய டிஜிட்டல் மற்றும் கலாச்சாரச் சூழலுக்கு ஏற்ப அது அமைய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

**இரண்டாம் நாள்:** அருட்பணியாளர் கிளாரன்ஸ் தேவதாஸ் கருத்துக்களைப் பகிர்ந்தார். இன்றைய நகர்ப்புறச் சூழலில் மக்கள் இடம்பெயர்ந்து வாழ்வதால், 'பங்கு எல்லைகள்' குறித்த புரிதலில், மாற்றம் தேவை என்பதை அவர் சுட்டிக்காட்டினார். மேலும், மேய்ப்புப்பணி நடைமுறைகளில், குறிப்பாக அருட்சாதனத் தயாரிப்பில் (sacramental preparation) ஒரு சீரான நடைமுறை அவசியம் என்றார். இந்தச் சீரான தன்மை என்பது கெடுபிடியான விதிகளாக இல்லாமல், ஒரு பொதுவான மேய்ப்புப்பணிப் பார்வையாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.



**மூன்றாம் நாள்:** இளையோர் பணிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அருட்பணியாளர் மைக்கல் தாஸ், இளையோருக்குச் செவிமடுக்கவும் அவர்களுடன் பயணிக்கவும் ஒரு புதிய அணுகுமுறை தேவை என்று கூறினார். மலேசிய கத்தோலிக்க இளையோர் தின (MCYD 2025) நிகழ்விலிருந்து கிடைத்த அனுபவங்களை அருட்பணியாளர் சைமன் லாவ் பகிர்ந்துகொண்டார். இளையோர் விரும்புவது: உண்மையான வழித்துணை, தாங்களும் திருஅவைக்குச் சொந்தமானவர்கள் என்ற உணர்வு, பகிரப்பட்ட பொறுப்புணர்வு மற்றும் அன்றாட வாழ்வில் விசுவாசத்தை இணைத்தல் ஆகியவையாகும்.



ஒவ்வொரு கருத்துப் பகிர்வுக்குப் பின்னரும், அருட்பணியாளர்கள் "ஆவியாரில் உரையாடல்" (Conversations in the Spirit) என்ற முறையில் அமைதியாகச் செவிமடுத்து, இணைந்து சிந்தித்தனர்.



மாநாடு திருப்பலியுடன் நிறைவடைந்தது. அப்போது பேராயர் ஜூலியன், அருட்பணியாளர்கள் தங்கள் "முதல் அன்பிற்கு" (first love - இறை அழைத்தலின் ஆரம்ப ஆர்வம்) திரும்புமாறும், பணியில் ஆர்வத்தைப் புதுப்பிக்குமாறும் கேட்டுக்கொண்டார். சிறப்பான மேய்ப்புப்பணி என்பது ஒத்துழைப்பு, இரக்கம் மற்றும் சகோதரத்துவத்திலிருந்து வெளிப்படுகிறது என்பதை அவர் நினைவுபடுத்தினார்.

இந்த மாநாட்டின் சிந்தனைப் போக்கு, 'ஒன்றியங்கும் உரையாடலுக்கு' (synodal dialogue) அளிக்கப்பட்ட முக்கியத்துவம், மற்றும் இளையோர், மறைக்கல்வி ஆகியவற்றின் மீதான புதுப்பிக்கப்பட்ட கவனம் ஆகியவை மாமறைமாவட்டத்தின் எதிர்காலத்திற்கான நம்பிக்கையின் அடையாளங்கள் எனப் பங்கேற்ற அருட்பணியாளர்கள் பாராட்டினர்.



## நற்பேறு பெற்றோர்

பொதுக்கால 4ஆம் ஞாயிறு

செப்பனியா 2:3; 3:12-13 1 கொரிந்தியர் 1:26-31 மத்தேயு 5:1-12

இன்றைய நற்செய்தியில் இயேசு கிறிஸ்து, துயருறுவோர் பேறு பெற்றோர் எனக் கூறுகிறார்.துயருறுவோர், பசி தாகம் கொள்வோர் பேறு பெற்றவராக எப்படி இருக்க முடியும்? உங்களை துன்புறுத்தி, அவதூறு கூறும்போது உங்களால் மகிழ்ச்சியாக இருக்க முடியுமா? முடியும் என செயலில் சாதித்துக் காட்டினார் நமதாண்டவர் கிறிஸ்து. மூன்று ஆணிகளில் சிலுவையில் தொங்கும் போது, “தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை” (லூக்.23:34) என்றார் இயேசு. இந்தச் சாதனை வீரரின் செயல் அறிக்கையே (manifesto) மலைப்பொழிவு (மத்.5:1-12). தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள் வெளியிடும் நிறைவேற்ற முடியாதச் செயல் அறிக்கை போல் அல்லாமல் மலைப்பொழிவில் சொன்னதை வாழ்ந்து காட்டியவர் இயேசு.

பணமும் பதவியும் பகட்டும் நிறைந்தவர்கள் அல்ல, சாதாரண மக்களே பேறு பெற்றோர் என மலைப்பொழிவில் இயேசு கூறுகிறார். ஏழையோர், துயருறுவோர், கனிவுடையோர் பேறு பெற்றோர் என அவர் பட்டியலிடுகிறார். “ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்”; இங்கு பொருளாதார ஏழைகளை (பணமில்லாதவர்) இயேசு குறிப்பிடவில்லை. மாறாக கடவுளே கதியென இருப்பவர்களைக் குறிப்பிடுகிறார். ஆண்டவரிடம் சரணாகதியாக இருப்போர்க்கு விண்ணரசு உரிமையாகும் என்கிறார். “துயருறுவோர் பேறுபெற்றோர்” துன்பமும் துக்கமும் வாழ்க்கையை விரட்டும் போது, துயருறுவோர் “ஆறுதல்” பெறுவர். ஆறுதல் என்பது கடவுளே நமது பக்கம் இருப்பார் என்பது பொருள்.

இந்தப் பேறுபெற்றோர் சொற்பொழிவை இயேசு மலை மீது ஏறி அமர்ந்து செய்கிறார்(மத்.5:1). புதியதொருக் கண்ணோட்டத்தை இது கொடுக்கிறது. நம்மைச் சுற்றியுள்ள சமூகம் பார்க்கும் பார்வைக்கு நேர்விரோதமாக இது அமைகிறது. இது உலகத்தின் பார்வை அல்ல. மேலே (மலை மேல்) இருந்து பார்க்கும் பார்வை. இது கடவுளின் பார்வை. சுதந்திரமாக வாழ்வதற்கு வெளியுலகக் கட்டுப்பாட்டில் இருந்து விடுபடக் காட்டும் பாதை. நம்மிடம் செல்வம் இருக்கலாம்; ஆனால் அதன் கட்டுப்பாட்டில் நாம் இருக்கக்கூடாது. ஒருவர் மீது மனத்தாக்கம் இருக்கலாம். அவர் மீதான வன்மமும் கோபமும் இருக்கக்கூடாது. அதிலிருந்து விடுதலைப் பெறச் செய்வது, மலைப்பொழிவு. மலைப்பொழிவை முழுமையாக பார்த்தால், கடவுளின் உள்ளம் தெரியும்; கடவுளின் குணநலன்கள் தெரியும். கடவுளின் உள்ளத்தையும் குணநலன்களையும் காட்டும் மலைப்பொழிவு, மனிதன் தெய்வமாக மாறும் வழியைக் கற்பிக்கிறது.

இயேசு அருளிய இந்த மலைப்பொழிவு, மனத்தாலும் உடலாலும் வலிமையற்றவர்களுக்கே என நினைத்தால், மலைப்பொழிவை உண்மையாகவே நாம் புரிந்து கொள்ளவில்லை என்றாகும். பலவீனமானவர்களால் இதனை மேற்கொள்ளும் சாத்தியமில்லை. மனத்தால் வலிமை உள்ளவர்களால் மட்டுமே இதனைச் சாதிக்க முடியும். வாழ்வு தரும் நற்கருணையில் வலிமை பெறும் நாம், மலைப்பொழிவில் கூறப்படும் நற்பேறு பெற்றோராய் மாற முடியும், சாதிக்க முடியும்.

அந்தோணி இன்னாசி, சைபர்ஜெயா

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைபெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.